2003 மே 5]

திரு. க. முருகவேல் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேறு எங்காவது கைமுறைக் காகித அலகுகள் இப்போது இயங்கி வருகின்றனவா என்பதை அறிய விரும்புவதோடு, அப்படி மூடப்பட்ட இந்த கிராம கைமுறைக் காகித அலகுகளைத் திறக்க முடியவில்லை என்று சொன்னாலும், அதிலே பாதிக்கப்பட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு, வேறு தொழில் பயிற்சிகள் ஏதாவது கொடுத்து, வேறு தொழிலை அவர்கள் செய்து, தங்கள் வாழ்க்கையை மேற்கொள்வதற்கு இந்த அரசு வேறு மாற்றுத் திட்டங்களை வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சங்கம் மூலம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, இந்த வழக்கு முடியும்வரை இதைச் செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 390, திரு. டி.கே. இராஜா, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

390—

சாலையைச் சீர் செய்தல்

***19389**—திரு. டி.கே. இராஜா:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவ்வாது மலையிலுள்ள வனத் துறை சாலைகளில் வாகனங்கள் செல்ல முடியாமல் உள்ளதால், அச்சாலைகள் சீர் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் கோட்டம், ஜவ்வாது மலையில் உள்ள வனச் சாலைகளின் மொத்த நீளம் 147.75 கிலோமீட்டர் ஆகும்.

இதில் 108 கிலோமீட்டர் நீளத்திற்குச் சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் மீதம் உள்ள 39.75 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் பிரதம மந்திரி கிராம சதக் யோஜனா திட்டத்தில் சேர்க்கப்பட்டு, ஊரக வளர்ச்சித் துறை நிதியுதவியுடன் இந்த நடப்பு ஆண்டில் சீர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

திரு. டி.கே. இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே, இன்னும் 39.75 கிலோமீட்டர் சாலைகள் போடப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஜவ்வாது மலை என்பது இந்தியாவிலே பிரசித்தி பெற்ற மலையாகும். இந்தியாவிலேயே மிகச் சிறந்த சந்தனங்களை விளைவிக்கக்கூடிய மலையாகவும், ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய வானிலை ஆராய்ச்சி நிலையத்தைக்கொண்ட மலையாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற அந்த ஜவ்வாது மலையிலே ஒன்றேகால் இலட்சம் மலைவாழ் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். மலைவாழ் மக்கள் நலனில் அக்கறைகொண்டிருக்கின்றது இந்த அரசு. என்னுடைய தொகுதியான ஆலங்காயம் ஒன்றியத்திலேயிருக்கின்ற மூன்று பஞ்சாயத்துகள், ஒன்று புதூர்நாடு, புங்கம்பட்டுநாடு, நெல்லிவாசல்நாடு என்கின்ற மூன்று பஞ்சாயத்துகளிலே, புதூர்நாட்டிலேயிருந்து, புங்கம்பட்டுநாடு வரையும், புதூர்நாட்டிலேயிருந்து நெல்லிவாசல் சிங்காரப்பேட்டை வரையிலான சாலைகள், 1932 ஆம் ஆண்டு வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் போடப்பட்டு, இன்றளவில் முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டு, அந்தச் சாலையிலே பஸ்கள் செல்ல முடியாமல், பள்ளிகள் இயங்காமல், அங்கே ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இயங்காமல், அந்த மக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான அந்தச் சாலைகள் துண்டிக்கப்பட்டு, 407 இரக லாரியில் மட்டுமே செல்லமுடிகின்ற அவல நிலை உள்ளது. எனவே, 25 கிராம மக்கள் அங்கே பாதிக்கப்பட்டு, அவர்களின் உடல்நிலை சரியில்லையென்று சொன்னால் 14 கிலோமீட்டர் டோலி கட்டி, தூக்கிவருகின்ற அவல நிலை; அங்கே விளைகின்ற விளைபொருட்களைக்கூட தலைச்சுமையாகத்தான் கீழே கொண்டு வருகின்ற அவல நிலை. எனவே, இதனைக் கருத்தில்கொண்டு பிரதம மந்திரியினுடைய கிராமச் சாலைத் திட்டத்திலே புதூர்நாடு முதல் சிங்காரப்பேட்டை சாலை வரை, இந்த ஆண்டிலே சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2003 மே 5]

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஞ்சியுள்ள 39.75 கி.மீ. நீளம் உள்ள, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சிங்காரப்பேட்டை-புதூர்நாடு மற்றும் புதூர்நாடு—காவனூர் ஆகிய இரு சாலைகளும், முன்னுரிமை அடிப்படையில் 2003-2004 ஆம் ஆண்டிற்கான பிரதம மந்திரி கிராம சதக் யோஜனா திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, ஊரக வளர்ச்சித் துறையின் நிதி உதவியுடன் மேற்குறிப்பிட்ட சாலைகளின் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி.கே. இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொண்டு, எங்களுடைய புங்கம்பட்டுநாடு முதல் கீழே இருக்கின்ற சிங்கப்பாளையம் வரையிலான மலைச் சாலையை அந்த மலைவாழ் மக்களே அமைத்து இருக்கிறார்கள். ஆனால், அது--reserve forest வனத் துறைக்குச் சொந்தமான இடம். அந்த reserve forest இடத்தை, வனத் துறை, வருவாய்த் துறைக்கு ஒப்படைக்க வேண்டும். வருவாய்த் துறைக்கு ஒப்படைக்க வேண்டுமென்று சொன்னால், வருவாய்த் துறை மூன்று பங்கு நிலங்களை வனத் துறைக்கு ஒப்படைக்க வேண்டும். வருவாய்த் துறையானது மூன்று பங்கு நிலங்களை வனத் துறைக்கு ஒப்படைப்பதற்குத் தயாராக இருக்கிறது. எனவே, சின்னவட்டானூரிலிருந்து சிங்கப்பாளையம் வரையிலான 4 கி.மீ. மலைச் சாலையை வனத் துறை, வருவாய்த் துறைக்கு ஒப்படைத்து, அந்தச் சாலையையும் தார்ச் சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, reserve forest–லே சாலை அமைப்பதற்கு Government of India-விடமிருந்து permission வாங்க வேண்டும். அந்தச் சாலையினுடைய தேவைக்கு ஏற்ப permission வாங்குவதற்கு Government of India-க்கு எழுதி, இந்தச் சாலையை அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 391, திரு. ப. அரசன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.